Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, SEPTEMBER 17 2024

# தேர்தல் தினத்தன்று ஊரடங்கு இல்லை

தேர்தல் தினத்தன்று ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும் திட்டம் தற்போதைக்கு இல்லை என்றும் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் அமுலில் உள்ளதாகவும் தேவைப்பட்டால் ஆயுதப்படைகள் தயார் நிலையில் இருப்பதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 17, 2024 | ஒளி: 10 கதிர் 052 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



**மனிதன் திடீரென்று தீயோனாவது மில்லை; நல்லவனாவது மில்லை;**
**பல நாள், பல வருடப் பழக்கத்தினாலேயே அவன் குணம் அமைகிறது...**
**- தர்ம போதனை**

# சிறுவர்களை பிரசாரத்தில் ஈடுபடுத்துவதாக குற்றச்சாட்டு



■ கனகராசா சரவணன்

காத்தான்குடி பிரதேசத்தில் பாடசாலை சிறுவர்களைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## வாழ்க்கைச் சுமைக்கான "போராட்டம் 2025இல் முடிவுக்கு வரும்"

மக்களின் வாழ்க்கைச் சுமைக்கான போராட்டத்தை அடுத்த வருடத்தில் முடிவுக்கு கொண்டுவருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதாரத்தை முறையாக முகாமைத்துவம் செய்து, ரூபாயை மேலும் வலுவடையச் செய்து, பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்கக் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதாகவும் இறுதியில் நிவாரணம் கிடைக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

## "சங்குக்கு வாக்களித்து தமிழரின் சங்கையை காப்பாற்றுவோம்"

### மண்டானையில் ஜெயசிறில் முழக்கம்

■ வி.ரி.சகாதேவராஜா

தமிழர்களாகிய நாம் அனைவரும் சங்குக்கு வாக்களித்து எமது சங்கையை காப்பாற்றுவோம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும், முன்னாள் தவிசாளருமான கலாநிதி கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மத்திய குழுத் தீர்மானமே

# "இறுதி முடிவு"

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென்ற எமது கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்திற்கு அமைவாக வாக்காளர்கள் உரியவாறு தங்கள் வாக்கை அவருக்கு வழங்க வேண்டும் என தமிழரசுக் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தீர்மானம் மிக்க உயர்மட்ட கலந்துரையாடல் வவுனியா தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் திங்கட்கிழமை (16) நடைபெற்றுள்ளது.

குறித்த கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எ.சுமந்திரன், சி.சிறிதரன், செயலாளர் ப.சத்தியலிங்கம், மட்டு. மாநகர சபையின் முன்னாள் மேயர் சரவணபவன், சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர், தமிழரசுக் கட்சியின் தீர்மான அறிக்கை கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவால் வாசிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## "இந்த தேர்தலில் வெற்றி நிச்சயம்"

நீண்ட காலமாக இந்த ஆட்சியாளர்கள் எமது நாட்டை ஆட்சி செய்தார்கள். நாடும் மக்களும் வறுமையின் அடிமட்டத்திற்கே வீழ்ந்தது. ஆட்சியாளர்கள் கட்டியெழுப்பப்பட்டார்கள், நாடு வீழ்ந்தது. நாங்கள் செப்டெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்கமொன்றை அமைப்போம் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

# நான் எதிர்ப்பு

தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் 6 பேர் கொண்ட குழுவின் உறுப்பினருமான சி.சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள கட்சி அலுவலகமான தாயகத்தில் 6 பேர் கொண்ட குழு கூறியதன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இன்றைய (திங்கட்கிழமை) கூட்டத்தில் ஐந்து பேர் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைப்பாட்டில் இருந்தார்கள்.

அது தொடர்பாக ஓர் அறிக்கையும் எழுதப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் ஏற்கெனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளிப்பதாகவே இருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

## "வெற்றியைத் தடுக்கவே முடியாது; ரணிலின் ஆட்சியில் மீட்சி ஏற்படாது"

சஜித் பிரேமதாசவின் வெற்றியே நாடு முழுவதும் தென்படுகிறது. பிரசாரங்களில் ஈடுபட்டு வருவதால், கிடைத்துள்ள அனுபவத்தின் அடிப்படையிலேயே இதனைத் தெரிவிப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளர்.





தொடர்ச்சி P2

## அமெரிக்கா எச்சரிக்கை

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ள காரணத்தால் இலங்கைக்குச் செல்லும் அமெரிக்கப் பிரஜைகளை எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கான தமது புதிய பயண ஆலோசனையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில், தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலும், அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படலாம்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை நடத்தக்கூடும். ஆகையால், அமெரிக்கப் பிரஜைகள் எச்சரிக்கையாக செயற்படுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## "எமது ஆட்சியில் பெண்ணே பிரதமர்"



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பிரதமர் ஒரு பெண்ணாக இருக்கலாம் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

செப்டெம்பர் 21ஆம் திகதி வெற்றி பெற்றதன் பின்னர், அரசியலமைப்பின் கீழ், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் புதிய அமைச்சரவையொன்று நியமிக்கப்பட்டு பாராளுமன்றம் கலைக்கப்படும் என மினுவாங்கொடையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "பிள்ளையானை கைது செய்ய வேண்டும்"

■ ஏ.எச்.ஏ.ஹுஸைன்

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான பிரதான சூத்திரதாரியினையும், அதனோடு தொடர்புடைய சகலரையும் கைது செய்து நீதியை நிலைநாட்டுவதோடு, பிள்ளையான் போன்ற கொலையாளிகளும் கைது செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “இறுதி முடிவு”

மேலும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இத்தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் பரிசீலிக்கப்பட்டன. இத்தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் தமிழ் மக்களின் பிரதேசங்களின் பொருளாதார மேம்பாடு பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விஞ்ஞாபனங்களில் புதிய அரசியலமைப்பு உருவாக்குதலும் ஏற்கெனவே அரசியலமைப்பில் உள்ள பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுலாக்குவதும் ஆகும். ஒற்றையாட்சி மற்றும் புத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதனவாகும். அதற்குப் பதிலாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகத் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பின் மூலம் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்பது பிரதானமாகும்.

முக்கியமாக இவ்விடயங்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசாநாயக ஆகியோருடன் நேரடியாகப் பேச்சுக்கள் நடைபெற்றன. தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, இணைப்பாட்சி அடிப்படையிலான சமஷ்டிக் கட்டமைப்பில் முழுமையான தன்னாட்சி சம்பந்தமாகத் தொடர்ந்து போராடி வந்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் பொருட்டு தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தீர்வுக்கான பிரேரணை முன்வைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்துடனும் மலையக தமிழர்களுடன் இணைந்து செயல்படுதல் வேண்டும். 13ஆவது அரசியல் திருத்தம் அரசியலமைப்பின் ஒற்றையாட்சிக்குட்பட்டது. இதனை அரசியல் தீர்வாக எம்மால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். இருப்பினும், தமிழினத்தின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை அடையும் வரை இந்திய அரசின் நட்புறவுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நடைமுறையிலிருக்கும் மாகாண அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

எனவே, 2024 செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பின்போது, ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென்ற எமது கட்சியின் மத்தியக் குழுத் தீர்மானத்திற்கு அமைவாக வாக்காளர்கள் உரியவாறு தங்கள் வாக்கை அவருக்கு வழங்க வேண்டும் என அன்புடன் கோருகின்றோம் என்றுள்ளது.

இதேவேளை, இன்றையதினம் கலந்துகொண்ட ஆறு உறுப்பினர்களில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மாத்திரம் குறித்த தீர்மானத்திற்கு இணக்கப்பாடு தெரிவிக்காத நிலையில், ஏனைய ஐவரும் தமது இணக்கப்பாட்டினை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களை பிரசாரத்தில் ஈடுபடுத்துவதாக குற்றச்சாட்டு

நாடளாவிய ரீதியில் கடந்த 14ஆம் திகதி வரை தேர்தல் வன்முறை தொடர்பாக 934 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் 8ஆம் திகதி தொடக்கம் 14 வரை தேர்தல் வன்முறை அதிகரித்துள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான முறைப்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, ஏறாவூர் நகரசபை மண்டபத்தில் கபே அமைப்பின் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் கண்காணிப்பாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை (15) மாவட்ட இணைப்பாளர் தேசியமானிய ஏ.சி.எம். மீராசாஹிப் தலைமையில் இடம்பெற்றது இதில் கலந்து கொண்ட நிறைவேற்று பணிப்பாளர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

கபே அமைப்பு தேர்தல் தொடர்பாக அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்தில் இருந்து 25 மாவட்டங்களில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது இதுவரை கபே அமைப்புக்கு 934 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் இதில் அதிகளவான முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிகளை மீறுகின்றது தொடர்பாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது

2015 மற்றும் 2019 நடைபெற்ற தேர்தலில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது, சுமுகமான கள நிலைவரம் காணப்பட்டாலும் கடந்த 8ஆம் திகதிக்கு முன்னர் சட்டவிரோத தேர்தல் பிரசாரம் அரச சொத்து துஷ்பிரயோகம், போன்ற முறைபாடுகள் அதிகரித்திருந்ததுடன், அந்த காலப்பகுதியில் வன்முறைகள் குறைவாக இருந்தன 8ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வன்முறைகள் அதிகரித்துள்ளது என்றார்.

# “சங்குக்கு வாக்களித்து தமிழரின் சங்கையை காப்பாற்றுவோம்”

திருக்கோவில் மண்டானைப் பிரதேசத்தில் இடம் பெற்ற பொது வேட்பாளருக்கான பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் பாக்கிய செல்வம் அரியநேத்திரனுக்கு ஆதரவளிக்கும் இந்நிகழ்வு மண்டானை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை(15) நடைபெற்றது.

கடந்த எட்டு ஜனாதிபதிக்கு வாக்கு போட்டு தமிழர்கள் கண்ட பலன் என்ன?ஆறு முறை பிரதம மந்திரியாக இருந்த ரணில் இதுவரைக்கும் தமிழருக்கென்று ஆற்றிய பணி என்ன? திருக்கோவில் பிரதேசத்தை முன்னேற்றுவோம் என்று கூறி பலர் வந்தார்கள் என்றார்.

ரணில் அழைத்தார் சென்றேன் என்று கூறி தந்தையைக் கொன்றவனுடன் கைகோர்த்து நிற்கும் அவலக் காட்சிகளைக் காண்கிறோம். கோடிக்காக ரணில் சஜித் பின்னால் செல்லும் கூட்டத்தை இன்னும் தமிழர்கள் நம்பலாமா? என்றும் கேள்வி எழுப்பினார். இங்கு வெள்ளம் கொரோனா வந்தால் நாங்கள் வருவோம். ஆனால், இன்று வெள்ளை சிவப்பு வாகனங்களில் வருபவர்கள் எப்பொழுதாவது இங்கு வந்தார்களா? தேர்தலுக்குப் பிறகு இவர்களை உங்களால் காண முடியுமா? இல்லை . ஆனால் அவர்கள் தருவதை வாங்கிக் கொள்ளுங்கள். உங்களது வாக்குகளைச் சங்குக்கு இடுங்கள். சங்கே முழங்கு. சலங்கையைக் காப்பாற்றுவோம் என்றார்.

# தேர்தல் தினத்தன்று ஊரடங்கு இல்லை

இது தொடர்பில், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தெரிவிக்கையில் , தேர்தல் காலத்தில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் (STF) பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள். தேவைப்பட்டால் பொலிஸிற்கு ஆதரவாக முப்படையினரும் தயார் நிலையில் உள்ளனர். செப்டெம்பர் 21 ஆம் திகதி வாக்களிப்பதன் பின்னர் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுமா என வினவியபோது, ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லை என குணதிலக்க தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும் தீர்மானம் ஜனாதிபதியிடம் மாத்திரமே உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் பாதுகாப்பு தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பாரிய அசம்பாவிதங்கள் எதுவுமின்றி இதுவரை நாடு முழுவதும் 500க்கும் மேற்பட்ட தேர்தல் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸார் தொடர்ந்தும் தமது முயற்சிகளை மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# “பிள்ளையானை கைது செய்ய வேண்டும்”

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர் பிரச்சினைக்கான தீர்வினையும் , பிள்ளையான் போன்ற கொலையாளிகளும் கைது செய்ய வேண்டும் என்றார்.

அத்துடன், அம்பாறை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான தீர்வினையும், வாகரை இல்மனைற் அகழ்வுடன் தொடர்புடைய காணி திருடர்கள், சட்டவிரோத மணல் கடத்தல் கார கும்பல் உட்பட பல கள்வர்கள், மட்டக்களப்பிலிருந்து அகற்றப்பட வேண்டும் எனவும் இவ்வாறான விஷமிகள் கைது செய்யப்பட வேண்டும் என்றார்.

அங்கு கருத்துரைத்த சஜித் பிரேமதாச, வடக்கு கிழக்கில் காணப்படும் தமிழர்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வையும் இவ்வாறான கொலையாளிகள் கள்வர்கள் மற்றும் சாணக்கியன் அவர்கள் தெரிவித்த முன்வைத்த அனைத்து கோரிக்கைகளையும் தமது அரசாட்சியில் இதற்கான நீதி நிலைநாட்டப்படும் என்பதனையும் ஐக்கிய மக்கள் கட்சியினுடைய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச உறுதியளித்தார்.

அதனையும் தாண்டி குறிப்பாக நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் தான் அமைச்சராகக் கடமையை ஏற்று இருந்த காலப்பகுதியில் முடிக்கப்படாமல் இருக்கின்ற அனைத்து வீட்டுத்திட்ட வேலைகள் அனைத்தும் ஒரு மாத காலப்பகுதிக்குள் நிறைவுறுத்தப்படுவதாகவும் கருத்து தெரிவித்தார்.

**“ சாணக்கியன் அவர்கள் தெரிவித்த முன்வைத்த அனைத்து கோரிக்கைகளையும் தமது அரசாட்சியில் இதற்கான நீதி நிலைநாட்டப்படும் என்பதனையும் ஐக்கிய மக்கள் கட்சியினுடைய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச உறுதியளித்தார்**

# “எமது ஆட்சியில்...

அனுரகுமார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் தேசிய மக்கள் சக்தி, எவ்வாறு அரசாங்கத்தை நடத்த முடியும் என எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியுள்ளனர். அனுர ஜனாதிபதியான பின்னர், கொழும்பு மாவட்டத்தில் விருப்பு வாக்கு பட்டியலில் அடுத்த இடத்தில் உள்ள லக்ஷ்மன் நிபுணாராச்சி புதிய பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார். அப்போது, நாங்கள் நான்கு பேர் கொண்ட அமைச்சரவையை நியமிக்கலாம், ஒரு புதிய பிரதமரை நியமிப்போம், ஒரு ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம்.

சுவிட்ஸர்லாந்தில் ஏழு பேர் கொண்ட அமைச்சரவை மட்டுமே இருப்பதாகவும், பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் வரை நான்கு பேர் கொண்ட அமைச்சரவை இரண்டு மாதங்களுக்கு இயங்க முடியும் என்றும் ஹேரத் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்குத் தேசிய மக்கள் சக்தியில் முக்கிய பிரமுகர்கள் யாராவது இருக்கிறார்களா என மக்கள் கேள்வி எழுப்புவதாகக் கூறிய அவர், பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் என பல தொழில் வல்லுநர்கள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஹரிணி அமரசூரிய எம்.பி. ஆவதற்கு முன் உங்களில் யாருக்காவது தெரியுமா? அவர் நாட்டுக்கே தெரியாது. ஆனால் தற்போது அவர் முழு நாட்டிற்கும் தெரிந்தவர். இப்படிப்பட்ட பலர் பாரிய பங்களிப்பை செய்யக்கூடியவர்கள் எங்களிடம் உள்ளனர் என்றார்.

# “போராட்டம் 2025இல்...

தெஹிவளையில் ஞாயிற்றுக்கிழமை (15) பிற்பகல் இடம்பெற்ற ‘ரணிலால் இயலும்’ வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய பொருளாதாரம், புதிய நாடு மற்றும் புதிய அரசியல் முறைமையைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தை தாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார். புதிய பொருளாதாரத்தை நாட்டுக்கு வழங்குவதே தனது தேவை எனத் தெரிவித்த ஜனாதிபதி, அதனை சஜித்துக்கோ அல்லது அனுரவுக்கோ செய்ய முடியாது.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் என்னுடன் 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஆனால், இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியை ஏற்க யாரும் முன்வரவில்லை. அந்த பதவிக்கு வேறு யாரும் இல்லாததால் நான் அப்போது பிரதமரானேன்.

அரசியல்வாதிகளாகிய எங்களுக்கு இரண்டு கடமைகள் உள்ளன. முதலில் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். இரண்டாவது, மக்களை வாழ வைக்க வேண்டும். ஆனால் அப்போது யாரும் அந்தப் பொறுப்பை ஏற்கத் தயாராக இருக்கவில்லை. அவர்களுக்கு எந்த தேவையும் இருக்கவில்லை.

இந்நாட்டு மக்களுக்கு உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு போன்றவற்றை வழங்க முடியாத நிலை இருந்த போது, அரசியல்வாதிகளாகிய அவர்கள் வருந்தவில்லையா? இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய கடமை தங்களுக்கு இருப்பதாக அவர்கள் நினைக்கவில்லையா? அன்று மக்கள் படும் இன்னல்களை புரிந்து கொள்ளாத சஜித்தும் அநுரவும் இன்று பதவியை கேட்கின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நாடு ஸ்திரமாக உள்ளது. ரூபாவை வலுப்படுத்தியுள்ளோம். இதனால், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைந்து வருகிறது. ஆனால் மக்களுக்கு இன்னும் பிரச்சினைகள் உள்ளன. பல குடும்பங்களில் வருமானத்துக்கும் செலவுக்கும் இடையே பெரிய போராட்டமே நடக்கின்றது எனலாம். அந்த போராட்டத்தை முடிக்கவே நான் முயற்சிக்கிறேன். ரூபாவைத் தொடர்ந்து வலுப்படுத்துவதால் அடுத்த ஆண்டு அந்த போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவோம் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன் அவர்கள் ஜனாதிபதியை மிகவும் உற்சாகமாக வரவேற்றனர்.

# நான் எதிர்ப்பு

மத்தியக் குழுவில் கடந்த முதலாம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானம் பிழை என நான் எழுத்து மூலமாகவும் வழங்கி இருக்கிறேன். நான் ஒரு தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற ரீதியில் எழுத்து மூலமாக அறிவித்து விட்டுத் தான் பிரித்தானியாவுக்கு சென்று இருந்தேன். 6ஆம் திகதி நான் மீளவும் இலங்கைக்குத் திரும்புவேன். ஏழாம் திகதி வரை கூட்டத்தினை வைக்க வேண்டாம் என கூறியிருந்தேன்.

அவ்வாறு கூட்டங்கள் வைத்தாலும் தீர்மானங்கள் எடுக்கப்படாது என்று பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் எனக்கு உறுதிமொழியையும் தந்திருந்தார்.

தற்போதைய தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராஜாவை 26ஆம் திகதி சந்தித்துப் பேசுகின்ற போது நாங்கள் தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றமாட்டோம் சில விடயங்கள் தொடர்பாகப் பேச இருக்கிறோம் என தெரிவித்திருந்தார். இவற்றையெல்லாம் தாண்டி ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஆறு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழு கூடி தீர்மானம் எடுக்காத நிலையில் மத்தியக் குழுவில் அவசர அவசரமாக யாருடைய தேவைக்காக யாருடைய தீர்மானத்தை எடுத்தார்கள். சஜித் பிரேமதாசவுக்காக அந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர். அந்த தீர்மானம் எடுத்த பின்னர் நான் கடிதம் மூலமாகவும் தெரிவித்திருந்தேன், இது கூர்ணர்வற்ற ஒரு முடிவு இதனை நான் எதிர்க்கிறேன், என்னைப் பொருத்தவரை நான் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக இந்த மக்களின் திரட்சிக்காக தமிழர்களுடைய தேசிய திரட்சியைக் கொண்டு வருவதற்கும் தமிழ் மக்களுடைய தேசிய உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வகையிலும் நாங்கள் ஒரு பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கின்ற ஒரு தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டு இருந்தேன். அதனை இப்போதும் கொண்டிருக்கிறேன். இன்றும் இந்தக் கூட்டத்தில் அதனை வலியுறுத்தி என்னுடைய கருத்து இவர்களுடைய தீர்மானத்திற்கு எதிரானது என்பதனை பதிவு செய்யுமாறு தெரிவித்து இருக்கிறேன் என தெரிவித்தார்.

# “இந்த தேர்தலில்...

“நாடு அனுரவோடு” தேசிய மக்கள் சக்தியின் பெருவெற்றிக்கான கூட்டம் - சாய்ந்தமருதில், வெள்ளிக்கிழமை (13) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்புகின்ற தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கமொன்றை நாங்கள் அமைத்துக்கொள்வோம். இந்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி நிச்சயம். தெற்கில் வசிக்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்த்து இருக்கிறார்கள். சாய்ந்தமருதுவில் வசிக்கின்ற முஸ்லிம் மக்களின் தீர்மானம் என்ன? நீங்கள் உரத்த குரலில் கூறுவதுபோல் தேசிய மக்கள் சக்தியை வெற்றியீட்டச் செய்விப்பது உறுதியானது.உங்கள் கலாசார அடையாளத்தை ஏற்றுக்கொண்டு சுதந்திரமான நாட்டை உருவாக்குவதுதான் தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பு.

எமது வெற்றியைத் தடுப்பதற்காக இன்று பல்வேறு தரப்பினர்கள் எமக்கு எதிரான சேறு பூசுதல்களிலும் பொய்யான தகவல்களை பரப்புவதிலும் ஈடுபட்டுள்ளார்கள். அண்மையில் ஹிஸ்புல்லா இங்கு வந்தாரா? அவர் வந்து எம்மைப்பற்றிய பல அவதூறுகளையும் பொய்களையும் கூறியிருக்கிறார். முஸ்லிம் மக்கள் மதரீதியாகக் கொண்டாடுகின்ற இரண்டு தருணங்கள் இருக்கின்றன. ஒன்று றமழான் வைபவம். அடுத்தது ஹஜ்ஜி வைபவம். நாங்கள் வந்ததும் இதில் ஒன்றை நிறுத்துவோமென ஹிஸ்புல்லா கூறியுள்ளார். அவருடைய மண்டையை பரிசோதித்து பார்க்கவேண்டும்.

மக்களைப் பள்ளிவாசலுக்குப்போக அனுமதிக்கமாட்டோமெனவும் கூறியுள்ளார். இவர்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் வந்து அவ்வாறான கதைகளைக் கூறுகிறார்கள் என்றார்.

# “வெற்றியைத் தடுக்கவே முடியாது;...

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, மானிப்பாயில் ஞாயிற்றுக்கிழமை (15) நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

“ரணில் விக்ரமசிங்கவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளவர்கள் நாட்டைச் சூறையாடியவர்கள். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் சேர்ந்து, இவர்கள்தான் நாட்டின் வளங்களைச் சூறையாடினர். இனவாதத்தைக் கட்டவிழ்த்து சமூகங்களை ஒடுக்கினர். மதவாதிகளுக்கு முதலிடமளித்து எமது மத நம்பிக்கைகளை கொச்சைப்படுத்தினர்.

வரலாற்றில் இடம்பெறாத மிகப் பெரிய ஊழல்கள் ரணிலின் அமைச்சரவையில் இடம்பெற்றன. கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய காலத்தை ஆள வந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் ஊழல்வாதிகளையே பாதுகாக்கிறார். இதனால், சிங்கள மக்கள் ரணில் விக்ரமசிங்கவையும் எதிர்க்கின்றனர். மூன்றாவது இடத்திலேயே ரணில் உள்ளார். முதலாம் இடத்திலுள்ள சஜித் பிரேமதாசவின் வெற்றி நிச்சயிக்கப்பட்டுவிட்டது.

மாற்றம் வேண்டிப் போட்டியிடும் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுபவம் போதாது. எனவே, இவர் ஆட்சிக்கு வந்தால் ஆறு மாதங்களில் கியூ வரிசை வந்துவிடும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சஜித்தின் ஆதரவு உச்சத்தை தொட்டுவிட்டது. எனவே, உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக, டெலிபோன் சின்னத்துக்கு வாக்களித்து வெற்றியின் பங்காளராகுங்கள்” என்றார்.

## “ஜனாதிபதியைத் தீர்மானிப்பதில்

# பெண்கள் தெளிவாக இருக்கின்றனர்”

ஏ.எச்.ஏ.ஹுஸைன்

நாட்டுக்கு உகந்த அடுத்த ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிப்பதில் நாட்டிலுள்ள பெண்கள் மிகத் தெளிவாக இருப்பதாக வடமேல் மாகாண ஆளுநர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

நாட்டுக்கு நல்லது செய்யவும் எதிர்கால இளம் சமுதாயத்தினரைப் பொருளாதார நெருக்கடியின்றி, மோதலின்றி, இனவாதமின்றி, மதவாதமின்றி வழி நடத்தவும் பொருத்தமான அனுபவ ஆளுமை ஆற்றலுள்ள அங்கீகரிக்கப்பட்ட தலைவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவை ஆதரித்து ஏறாவூரில் திங்கட்கிழமை (16) இடம்பெற்ற பிரசாரக் கூட்டங்களில் அவர் உரையாற்றினார்.

பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் ஆதரவாளர்களாகத் திரண்டிருந்த கூட்டங்களில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர் நஸீர் அஹமட், வரப்போகின்ற ஜனாதிபதி யார் என்பதில் நாட்டுக் குடி மக்களில் பாதிப் பங்கினருக்கு மேலுள்ள பெண்கள் தீர்மானித்து விட்டார்கள். ஏனெனில், எரிவாயு இல்லாமல் பட்ட கஷ்டம் பெண்களுக்குத்தான் தெரியும் என்றார்.



## தனி சக்கரத்தில் விளையாடிய 12 இளைஞர்கள் கைது



சமூக வலைத்தளமான Tik Tok ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டு, கெஸ்பேவ ஜாலியா கொட மாற்றுப் வீதியில் மோட்டார் சைக்கிள்களில் தனி சக்கரத்தில் பயணித்த 12 இளைஞர்கள் 18 மோட்டார் சைக்கிள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது இளைஞர்கள் அறுவர், மோட்டார் சைக்கிள்களை விட்டுவிட்டுத் தப்பி ஓடி விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாலை முதல் நள்ளிரவு வரை பெருமளவிலான முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் வீதியில் அதிக சத்தம் எழுப்பி வருவதாக 119 பொலிஸ் அவசர அழைப்பு நிலையம் மற்றும் பிலியந்தலை பொலிஸ் நிலையத்திற்குத் தொடர்ந்து வந்த தொலைபேசி அழைப்புகளின் அடிப்படையில், பத்து பொலிஸ் அதிகாரிகள் குழு அங்குச் சென்றது. இளைஞர்கள் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## “மன்னார் மாவட்டத்தில் 90,607 வாக்காளர்கள்”




எஸ்.ஆர்.லெம்பேட்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது, இம்முறை மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கனக சபாபதி கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் திங்கட்கிழமை (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 21ஆம் திகதி இடம் பெற உள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது, வன்னி தேர்தல் தொகுதி, மன்னார் மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. எமது நிர்வாக தேவை கருதிக் குறித்த 98 வாக்களிப்பு நிலையங்களும் 25 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வலயமும் உதவி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாக குறித்த 98 வாக்களிப்பு நிலையங்களும் மேற்பார்வையின் கீழ் செயல்படும்.

மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமாக மன்னார் மாவட்டச் செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குள் 7 வாக்கு எண்ணும் நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும். அதனூடாக மாவட்டத்தின் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மன்னார் மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பைப் பொறுத்தமட்டில், மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற 10 ஆயிரத்து 36 உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று வாக்களிப்பு இடம் பெற்றது.

இதில் 9 ஆயிரத்து 945 உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்களிப்பை மேற்கொண்டுள்ளனர். 91 பேர் வாக்களிக்கவில்லை. குறித்த விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் குறித்து அனைத்து பயிற்சி வகுப்புக்களும் இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தேர்தல் குறித்து 20 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்து முறைப்பாடுகள் அனைத்தும் வன்முறையுடன் தொடர்பு பட்டதாக இல்லை என்றார்.

## 1,500 பொலிஸார் கடமையில்

க.அகரன்

வவுனியாவில் ஜனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக சுமார் 1,500 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் பி.எ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பான இறுதி கலந்துரையாடல் வவுனியா மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை (16) இடம்பெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வவுனியா மாவட்டத்தில் 152 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன 12 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வாக்கெண்ணும் மத்திய நிலையமாக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி செயற்படவுள்ளதுடன், அதற்கான உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.



## சிறிதரன் எம்.பியை சந்தித்தார் திலகராஜ்

நிதர்ஷன் வினோத்



யாழ்ப் பாணத்திற்கு திங்கட்கிழமை (16) விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜ், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் சிறிதரன் எம்.பியிடம் கையளித்துள்ளார்.

அதேபோன்று, யாழில் பலரையும் சந்தித்து தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை கையளித்து கலந்துரையாடியுள்ளதுடன், தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டார்.

## “அறிவுபூர்வமான முடிவை எடுப்போம்”

வ.சக்தி

தமிழ் மக்களின் தலைவர்கள் என தம்மைக் கடந்த இரண்டு தசாப்தங்களாக கூறி கொண்டவர்கள் தமிழ் மக்களைப் பிழையாக வழி நடத்தியதன் விளைவாக அபிவிருத்தி மற்றும் உரிமை சார் விடயங்களில் மிகவும் பின் தங்கிவிட்டனர் என இலங்கை தேசிய ஜனநாயக கட்சியின் தலைவரும், அகில இலங்கை இந்து சம்மேளனத்தின் தலைவருமான நாரா.டி.அருண்காந்த் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை(15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தேசிய ஜனநாயக கட்சியானது இம்முறை தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க அவர்களை ஆதரிப்பது என இலங்கை தேசிய ஜனநாயக கட்சி தீர்மானித்துள்ளது என்றார்.

மேலும், இளைஞர்களின் தொழில் வாய்ப்பு உள்ளிட்ட விடயங்களில் தமிழ் தலைவர்கள் ஒரு சதவீதம் கூட அக்கறை செலுத்தவில்லை. இதன் விளைவாக இளைஞர்கள் மிகவும் விரக்தி அடைந்துள்ளனர். பல இளைஞர்கள் அவர்களுடைய வயதையும் தொலைத்துவிட்டு என்ன செய்வதென்றே தெரியாமல் சுற்றித்திரிகின்றனர்.

அதற்குக் காரணம் எமது தலைவர்களிடம் இது தொடர்பில் எந்த திட்டங்களும் அவர்களது மூளையில் இல்லை. எமது மக்களின் வாக்குகளைப் பெற நினைக்கும் ஒவ்வொரு தலைவரும் எமது மக்களின் கனவுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் எமது தமிழ் தலைமை ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிக்கக் கோரியது. அதன் விளைவு யாருமே அறிந்திராத மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றுவந்து தாம் வெற்றி பெற காரணமாக இருந்த அந்த தலைமையையே அழித்தொழித்தார். அதன் பின் ராஜபக்ஷவை தோற்கடிக்க அடுத்த தேர்தலில் பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தனர். ஆனால் ராஜபக்ஷ மீண்டும் வெற்றி பெற்றார். மீண்டும் தமிழ் மக்கள் அரசியல் அனாதைகளாக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, எப்படியும் இனி ராஜபக்ஷ யுகம்தான் நீடிக்கப் போகிறது என்று தப்புக்கணக்கு போட்ட எமது தலைவர்கள் ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கக் கோரினர். ஆனால், அத்தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார். சில தமிழ் தலைவர்கள் அவருடன் இருந்தாலும், அதன் ஊடாக தமிழ் இளைஞர்களுக்கு எந்த வகையிலும் தொழில் வாய்ப்பு போன்ற விடயங்களில் உதவவில்லை. இறுதியாக நடைபெற்ற தேர்தலில் கூட கோட்டாபயவின் வெற்றியைக் கணிக்கத் தவறிய எம்மவர்கள், அவருக்கு எதிராக வாக்களித்தனர். ஆனால் கோட்டாபய பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றார்.

இவ்வாறு எமது மக்களை உணர்வுப்பூர்வமாக முடிவெடுக்க வைத்து, முட்டுச்சந்தில் நிற்க வைத்தது தான் மிச்சம். ஆனால், எமது தலைவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்தும் மக்களுக்குத் தெரியாமல் கிடைத்துக் கொண்டு தான் இருந்தது.

ஆகவே, மக்களே இனி வரும் தேர்தல்களில் யார் வெற்றி பெறுவார்களோ அவர்களது நகர்வுகளைச் சரியாகக் கணித்து அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். இதற்கு எமது தலைவர் சரியான புள்ளி விவரங்கள் அவதானிப்புக்கள், கலந்துரையாடல்கள் அவசியம். அத்துடன், இம்முறை அனுரகுமார திசாநாயக்க வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் அனுரவிற்கு பெறும் அலை தோன்றியுள்ளது. அதை நாம் சரியாகப் பயன்படுத்தி நாமும் எமது மக்களுக்கு பெரும் பணியாற்றுவோம். உணர்வுபூர்வமாக அன்றி அறிவுபூர்வமான முடிவை எடுத்திடுவோம். என அவர் இதன்போது தெரிவித்தார்.



## “மனித நேயத்தை வளர்ப்போம்”

ஏ.எம்.ஜலீல்

“மனித நேயத்தை வளர்ப்போம்” எனும் தொனிப்பொருளில் 2024இன் சாகித்ய கலை விழா உக்குவளை பிரதேச செயலக அரங்கில் புதன்கிழமை(11) நடைபெற்றது.

உக்குவளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலாளர் தென்னகோன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பிரதேச செயலக கலாசார பிரிவின் கலைத்துறை சார் அதிகாரிகள் கலைஞர்கள் எழுத்தாளர்கள் சர்வ மத குருமார்கள் மதத் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

இந்நிகழ்வில் சிங்கள, தமிழ், மத கலாசார நிகழ்ச்சிகள் மேடையேற்றப் பட்டதுடன், நிகழ்வின் இறுதியில் கலாசார நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்கள் கலைஞர்களுக்குப் பிரமுகர்கள் சான்றுகளை வழங்கி வைத்தனர்.











# கடமைக்கு அப்பாற்பட்ட பொறுப்பாகும் என்பதை நினைவில் கொள்க

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 4 நாட்கள் மட்டுமே இருக்கின்ற நிலையில், பல பல்கலைக்கழகங்களில் பெருமளவிலான மாணவர்கள் வாக்களிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணம், ருகுணு, களனி ஆகிய பல்கலைக்கழகங்களில் எதிர்வரும் 20ஆம் திகதி கல்வி நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதால், வாக்களிப்பதற்காக வீடுகளுக்குச் செல்லும் வாய்ப்பை தூர மாகாணங்களில் வசிக்கும் மாணவர்கள் இழக்க நேரிடும் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலையீடு மற்றும் மிக எளிமையான விசாரணையின் மூலம் தீர்க்கப்படக்கூடிய எளிய பிரச்சினை இது.

மறுபுறம், மனிதனின் அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் வகையில், விரிவுரைகளை ஏற்பாடு செய்வது சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் விரிவுரை அட்டவணையை நெருக்கடி இல்லாத வகையில் சீர்செய்ய முடியாவிட்டால், அது இந்நாட்டுப் பல்கலைக்கழக முறைமையின் முறைசாரா தன்மையை நாட்டுக்கு வெளிப்படுத்தியதாகும்.

பல்கலைக்கழக மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலால் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் செப்டெம்பர் 13ஆம் திகதி முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் மற்றும் முகாமைத்துவ பீட மாணவர்கள் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட இந்த மோதலின் தோற்றம் அரசியல் சித்தாந்தங்களின் மோதலே என தற்போது தெரியவந்துள்ளது.

ஒரு பல்கலைக்கழகத்தில் அரசியல் சித்தாந்தங்கள் காரணமாக மோதல்கள் ஏற்படுவது இது முதல் முறையல்ல. ஆனால், ஒரு முக்கியமான தேர்தலுக்கு முன்பு, இந்த வழியில் தங்கள் எதிர் அரசியல் சித்தாந்தங்களுடன் ஆயுதம் ஏந்தியதன் மூலம், இந்த நாட்டின் பல்கலைக்கழக அமைப்புக்கு அவப்பெயர் ஏற்பட்டது. இந்த நாட்டிற்குப் பல பிரபலமான பாத்திரங்களை வழங்கிய ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் போன்ற புத்திஜீவிகளின் புகலிடங்களில் இவ்வாறான மோதல்கள் ஏற்படுவது மிகவும் துயரமானது.

பல்கலைக்கழகங்கள் கல்விச் செயற்பாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற குறுகிய சித்தாந்தத்தில் நாம் சிக்கிக் கொள்ளவில்லை. ஆனால், கல்விக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பது எங்கள் நிலைப்பாடு. பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து அரசியலைப் பிரித்தெடுக்க முடியாது.

இந்நாட்டின் பல பிரபல அரசியல் பிரமுகர்களுக்குப் பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள் கையேடுகளை வழங்கியமை நாடு முழுவதும் அறியப்படுகிறது. ஆனால் சமீபகாலமாக அரசியல் சித்தாந்தங்களை ஊக்குவிக்கும் ஒரே நோக்கத்துடன் பல்கலைக்கழகங்களுக்குள் ஊடுருவுவது பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். அது ஒருபோதும் வளர விடக்கூடாதுஇதனால் இந்நாட்டில் பல்கலைக்கழக அமைப்பு பலவீனமடைந்துள்ளது.

பெற்றோர்கள் கஷ்டப்பட்டு பிள்ளைகளைப் படிக்க வைத்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவது பணம் சம்பாதிக்க அல்ல, முதுமையில் பட்டம் பெற்று நல்ல வேலை கிடைத்தவுடன் பார்த்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில். அப்பாவி பெற்றோரின் இத்தகைய தூய விருப்பங்களைச் சீர்குலைப்பது பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் பிள்ளைகளின் கடமைக்கு அப்பாற்பட்ட ஒரு பொறுப்பாகும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## தீர்க்கமான கட்டம்:

# மக்கள் கையில் ஆயுதம்

**மொஹமட் பாதுஷா**

இலங்கைத் தேசத்தின் ஒன்பதாவது ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கு இன்னும் 3 நாட்கனே இருக்கின்றன. நாளை நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரங்கள் முடிவடைவது மட்டுமன்றி, வேறு வழிகளில், அதாவது சமூக ஊடகங்களின் ஊடாக பிரசாரங்களைச் செய்வதும் சாத்தியமற்றதாகிப் போவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

நாட்டு மக்கள் ஆறாம் அறிவின் மூலம் சுயமாகச் சிந்தித்து, பொருத்தமான ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பதற்கான முடிவை எடுக்கும் காலமாக இந்த நாட்களைக் குறிப்பிடலாம்.

இந்த நாட்டில் ஊழலும் அதிகார துஷ்பிரயோகங்களும் துடைத்தெறியப்பட வேண்டும் என்றும் அரசியல் கலாசாரம் மாற்றியமைக்கப்பட்டு பொருளாதார, அரசியல் மற்றும் சமூகக் குற்றவாளிகள் எல்லாம் தண்டிக்கப்பட வேண்டும் என்று பல வருடங்களாக நாம் கூறிக் கொண்டிருக்கின்றோம்.

அதனை ஒரே இரவில் செய்து விட முடியாது. அதற்கு நீண்ட காலமெடுக்கும்.

கொள்கைப் பிரகடனங்களில், தேர்தல் விஞ்ஞாபனங்களில், மேடைகளில் எதனை வேண்டுமென்றாலும் சொல்லி விடலாம். ஆனால், நடைமுறையில் அதனைச் செய்வது அவ்வளவு சுலபமானதல்ல. அவ்வாறு கடந்த காலங்களில் ஜனாதிபதிகள் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில், 50 சதவீததத்தையேனும் அவர்கள் நிறைவேற்றியதில்லை என்பதை நாம் அறிவோம்.

ஆயினும் கூட, நாம் வேண்டி நிற்கின்ற மாற்றத்தைத் தேர்தல் என்ற களத்தில் வாக்குகள் என்ற ஆயுதத்தின் ஊடாக ஆரம்பித்து வைக்க வேண்டியிருக்கின்றது. அந்த வகையில், செப்டெம்பர் 21ஆம் திகதி நாட்டிலுள்ள 171 இலட்சம் மக்களுக்கும் அதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது என்பதே இங்கு முக்கியமானது.

அரகலயவுக்குப் பின்னால் சில வெளிச் சக்திகளும் அவர்களது நிகழ்ச்சி நிரல்களும் இருந்தாலும் கூட, மக்கள் இதற்கு வழங்கிய ஆதரவு தூய்மையானது. ஏனெனில், கடந்த காலங்களில் நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் ஊடாக இந்த தேசிய அரசியல் கட்டமைப்பில் ஒரு மாறுதல் வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு பொது மகனுக்கும் ஏற்பட்டதை மறுக்க முடியாது.

இந்த நாட்டுக்குப் பொருத்தமான ஒரு தலைமை, ஆட்சியாளர், கொள்கைத் திட்டம், முறைமை, அரசியல் கலாசாரம், பொருளாதார திட்டம், இனவாதமற்ற ஆளுகை அவசியம் என்று இலங்கை மக்கள் அங்கலாய்க்காத நாளில்லை என்றே சொல்லலாம்.

எனவே, இந்த அபிலாஷையை வெளிப்படுத்துவற்காகவே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் மக்களின் ஜனநாயக உரிமை காலம் பிந்தாமல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் நாட்டு மக்கள் கூறி வந்தனர். அந்த சந்தர்ப்பம்தான் இப்போது நெருங்கி வந்திருக்கின்றது என்பதை கவனத்திற் கொள்ளுங்கள்.

இது ஒரு வித்தியாசமான தேர்தல் எனலாம். நேரடியாக இனவாதக் கருத்துக்கள் பிரசாரங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, இன ஐக்கியம் பற்றியே பேசப்படுகின்றது. எந்தவொரு பிரதான வேட்பாளரையும் 'இன வாதி' என்று முஸ்லிம்களோ தமிழர்களோ ஒதுக்கி விட முடியாதுள்ளது.

இலங்கையில் பல தசாப்தங்களாக கோலோச்சிய ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இந்தத் தேர்தல் சீனிலேயே இல்லாமல் போய் விட்டது. கடந்த எட்டு வருடங்களுக்குள் உருவான இரு கட்சிகளும், கலவரங்களால் அவப் பெயரைச் சந்திருந்த நிலையில், பெயர் மாற்றப்பட்ட இன்னுமொரு கட்சியுமே இன்று களம் காண்கின்றன.

வழக்கமாக இரு முனைப் போட்டியே உச்சத்தில் இருக்கும். இதன் பின்னால் இரு சர்வதேச நாடுகள் காய் நகர்த்தலை மேற்கொள்ளும். 2024 ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி நிலவுகின்ற சமகாலத்தில், இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகியவை இந்த வேட்பாளர்களுக்குத் திரைமறைவில் ஆதரவளிக்கின்றன.

ஏற்கெனவே இரண்டு முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறாத, ஆனால் 2022இற்குப் பிறகான நெருக்கடியை ஓரளவுக்கு வெற்றிகரமாகத் தீர்த்து வைத்த ரணில் விக்ரமசிங்க 3ஆவது தடவை போட்டியிடுகின்றார். சஜித் பிரேமதாசவும் அனுரகுமார திசாநாயக்கவும் இரண்டாவது தடவை களத்தில் குதித்துள்ளனர். ஏனையவர்கள் முன்னணிக் களத்தில் இல்லை.

இந்த மூவேந்தர்களும் எப்பேர்ப்பட்டவர்கள், அவர்களது அரசியல் வரலாறு, அவர்கள் இந்த நாட்டுக்கு செய்த நல்லவைகள், கெட்டவைகளையும் அவர்களது உண்மையான முகம் என்ன என்பதையும் மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

எனவே, அரசியல்வாதிகள், அரசியல் தரகர்கள், குரங்கு அரசியல் செய்பவர்கள் சொல்வதையெல்லாம் முட்டாள்தனமாக நம்பிக் கொண்டு அதன்பின்னால் போகத் தேவையில்லை. குறிப்பாக முஸ்லிம், தமிழ் அரசியல்வாதிகளின் பொய்யான நியாயப்படுத்தல்களை மக்கள் கொஞ்சம் கூட நம்பத் தேவையில்லை.

அப்படியென்றால் என்ன செய்ய வேண்டும்?

இந்த நாட்டில் வாழும் மக்களின் எழுத்தறிவு வீதம் 92 ஆகும். அதே அளவுக்கு அரசியல் அறிவு இருப்பதாக நாம் கூறிக் கொண்டாலும் அது தெளிந்த அறிவல்ல என்பதை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பொதுவாக மூவின மக்களும் அந்தந்த இனங்களைச் சேர்ந்த 'அரசியல் வறுமை பிடித்த' தலைவர்களால் பிழையான முறையில் அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

எல்லாச் செய்திகளும் உள்ளங் கை வரை உடனுக்குடன் வந்து கிடைக்கின்ற இந்த யுகத்தில் மக்கள் சுயமாகச் சிந்தித்து, தீர்க்கமான, தெளிவான முடிவை எடுக்க வேண்டும். இந்த மூவரில் யார் ஜனாதிபதியாக வந்தாலும், அவர்கள் சொல்கி;ன்ற மாற்றங்களை எல்லாம் அதே வேகத்தில் கொண்டு வந்து விட முடியாது என்ற யதார்த்தத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, முதலில் யாருக்கு வாக்களிப்பது என்ற இறுதி முடிவை இப்போது எடுத்தாக வேண்டும். இரண்டாவது விருப்பத் தெரிவு அளிப்பதா என்பதையும் தீர்மானிக்க வேண்டும். இனியும் மிதப்புநிலை வாக்காளர்களாக நாம் இருக்க முடியாது.

இலங்கை படித்த, எழுத்தறிவுள்ள மக்களைக் கொண்ட நாடென்று பெருமைப்பட்டுக் கொண்டாலும் பெரும்பாலான தேர்தல்களில் வாக்களிப்பு 75 சதவீதத்தை தாண்டவில்லை என்பதும், கணிசமான வாக்குகள் நிராகரிக்கப்படுகின்றன என்பதும் மிகவும் கவலைக்குரிய முக்கிய விடயங்களாகும்.

வாக்கு என்பது நமக்கு கிடைத்திருக்கின்ற உரிமை. அதற்காக பல போராட்டங்கள் இடம்பெற்றன. இன்றும் வாக்குரிமைக்காக உலகில் அங்காங்கே மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, தமிழர்கள் உட்பட அனைத்து இன மக்களும் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும்.

தேர்தலைப் புறக்கணிக்கக் கோருவது சட்டத்திற்கு முரணானது என்பதுடன் வாக்களிக்காமல் இருப்பது புத்திசாலித்தனமானதுமல்ல.

அத்துடன், வாக்குகளைச் சரியான முறையில், செல்லுபடியாகும் தன்மையுடன் அடையாளமிடுவது மிக அவசியமாகும். ஏனெனில், கடந்த பாராளுமன்ற தேர்தலில் சுமார் ஏழரை இலட்சம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

இதில், படித்த அரச ஊழியர்களில் வாக்குகளும் உள்ளடங்கும். அதாவது, அரச அதிகாரிகள், படித்த மக்களின் வாக்குகளே கணிசமாக நிராகரிக்கப்படுமாக இருந்தால், படிப்பறிவு குறைந்த, விபரம் அறியாத, பாமர மக்கள் மற்றும் முதியவர்களின் வாக்குகளின் நிலைமை எப்படி இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

குறிப்பாக, இந்த தேர்தலில் இரு வேட்பாளர்களுக்கு இடையிலேயே நெருங்கிய போட்டி காணப்படும் என்பதால் யாருக்கும் 50 சதவீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெற முடியாமல் போகும்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில், மூன்றாவது இடத்திலுள்ள வேட்பாளரிற்கு வாக்களித்த மக்களின் இரண்டாவது விருப்புத் தெரிவு வாக்கே வெற்றியாளரைத் தீர்மானிக்கும் பலத்தைப் பெறும். எனவே, ஒவ்வொரு வாக்கும் சரியான முறையில் அடையாளமிடப்பட வேண்டும்.

வாக்குச் சீட்டில் மேலிருந்து கீழாக வேட்பாளர்களின் பெயர்களும், அதற்கு எதிரே அவர்களது சின்னங்களும் தரப்பட்டிருக்கும். அதற்கு நேரெதிரே புள்ளடியிடுவதற்கான கூடுகள் காணப்படும்.

எனவே, ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு மட்டும் வாக்களிக்க விரும்பும் வாக்காளர், குறிப்பிட்ட வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்திற்கு எதிரே உள்ள கூண்டில் புள்ளடியிட வேண்டும். அல்லது 1 என்ற இலக்கத்தை எழுத முடியும்.

இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் அளிக்கின்றவர்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். விருப்பு வாக்குகள் அளிப்பவர்கள் முதலாவது தெரிவான வேட்பாளருக்கு 1 என்ற இலக்கத்தையும், இரண்டாவது விருப்பு வாக்கை 2 என்ற இலக்கத்தின் மூலமும், 3ஆவது விருப்பு வாக்கை 3 என்ற இலக்கத்திலும் அடையாளமிடலாம்.

1 என்ற இலக்கத்திற்குப் பதிலாக புள்ளடியிட்டு விட்டு, அடுத்த இரு விருப்பத் தெரிவுகளுக்கும் எண்களால் அடையாளமிட்டாலோ அல்லது மூன்று வாக்குகளையும் புள்ளடிகளால் அடையாளமிட்டாலோ அந்த வாக்குகள் நிராகரிக்கப்படும். இந்த விடயங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்வதுடன் ஏனையவரையும் அறிவூட்ட வேண்டும்.

இது, நாட்டின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் தருணம். இனி வரும் ஐந்து வருடங்களுக்கு நாம் யாரால் ஆளப்பட வேண்டும் என்பதை மக்கள் வெளிப்படுத்துகின்ற கட்டம் இது. எனவே, உங்களது தெரிவு சரியானதாக இருக்க வேண்டும்.

2019இல் 69 இலட்சம் மக்கள் இட்ட புள்ளடிகளால், நாடும் மக்களும் நடுத்தெருவிற்கு வந்த கதை.... 21ஆம் திகதி பிற்பகல் 4 மணிவரை நினைவிருக்கட்டும்.



## வாழ்வியல் தரிசனம்

ஒரு சிலர் வாழ்க்கையைப் பற்றி பயமுறுத்தியபடியே இருப்பார்கள். அடிக்கடி உலகில் நடக்கும் கஷ்டங்கள், துன்பங்களை மட்டுமே பேசிக் கொண்டிருப்பார்கள்.

எழுச்சி தரும் விடயங்கள், களிப்பூட்டும் அனுபவங்களை நினைப்பதே இல்லை. வெளி உலகை நோக்காமல் பயந்தபடி வாழ்வது மட்டுமன்றி, தன்னைச் சுற்றி இருப்பவர்களுடனும் துணிச்சலற்ற பேச்சுகளையே பேசுவார்கள். இத்தகையோருடன் பழகுவதே கஷ்டம்.

மக்கள் நிறைந்து வாழும் பூமியில் அச்சத்துடன் வாழக்கூடாது. எதையும் எதிர்கொள்ளத் தயங்கக்கூடாது. தேவையற்ற சில விடயங்களில் இரந்து, விலக வேண்டும். தெரிவில் ஒருவன் போதையில் அலட்டினால், அதைக் கேட்டு ரசிக்கக் கூடாது.

தெரிவில் எவராவது சண்டையிட்டால், திரும்பிப் பார்த்து அதை விமர்சிப்பது முட்டாள்தனம். இதனால், தேவையற்ற கும்பலுடன் மல்லுக்கட்ட வேண்டி ஏற்படலாம்.

உலகில் ரசிக்க வேண்டிய விடயங்கள் பலவுண்டு. தகாததைப் பார்ப்பதே தவறானது. பெறுமதியான காலத்தை இழக்கலாமா? நல்லதை நோக்குக; அனுபவியுங்கள்!

நன்றி–பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### அதிகாரிகள் கவனிக்காதது ஏன்?

கொக்கட்டிச்சோலை- மகிழடித்தீவு சந்தியிலிருந்து அம்பிளாந்துறைச்சந்தி வரை போக்குவரத்துக்கு பொருத்தமில்லாத வகையில் பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் மிகவும் அசௌகரியமடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் பிரதேச செயலகம், பிரதேச சபை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம், ஆசிரியர் வள நிலையம், கோட்டக் கல்வி அலுவலகம் மற்றும் பல பாடசாலைகள் போன்ற பல முக்கியமான நிறுவனங்கள் அமைந்திருக்கின்றன.

ஆனால், வீதி பல வருட காலமாக செப்பனிடப்படாமல் கைவிடப்பட்ட காரணத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றது.

ஆலய மகோற்சவம் ஆரம்பமாக இருக்கின்ற இந்த நிலையில், ஆயிரக்கணக்கான மக்கள் இந்த பாதையால் பயணிக்க இருக்கின்றார்கள்.

எனவே, இந்த வீதியைப் புனரமைத்துத் தர வேண்டும் என்று கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தனிடம் பல பொது அமைப்புகள் மகஜர்கள் வழங்கியிருந்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

- வி.ரி.சகாதேவராஜா





# இறப்பர் தோட்டங்களும் இன்றைய நிலையும்



பெரியசாமி சுசாந்தனி,
ஊடககற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கை என்ற வர்த்தக பொன் நாட்டின், மலையகம் என்றவுடன் தேயிலைத் தொழிலைப் பேசும் நம்மவர், இறப்பர் மரங்கள் படும் இரணங்களை அங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள் படும் அவல நிலை தொடர்பிலும் பேசப்படுவதில்லை. இறப்பர் மரங்களுக்கு இரணங்கள் புதிதல்ல என்பது போல, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழிகள் புதிதல்ல என்று தான் கூறவேண்டும். இரணங்களைக் கண்டு அஞ்சுவதில்லை, நம்மவர் இருப்பினும் எம்மவரின் நிலையை வெளிப்படுத்த வேண்டியது எழுத்தாணி பிடித்த எங்களின் கடமையல்லவா.

உலக வாழ் மக்களைப் பொறுத்தவரையில் மலையகப் பெருந்தோட்டம் என்பது வெறுமனே தேயிலை மாத்திரமே என்று பலரும் நினைத்துள்ளனர். அவ்வாறிருக்க மலையகப் பெருந்தோட்டம் என்பது இறப்பர் தோட்டங்களையும் ஒன்றிணைத்தது என்றே கூற வேண்டும். பிரதானமாக சப்ரகமுவ மாகாணத்தினுடைய இரத்தினபுரி மற்றும் கேகாலை போன்ற மாவட்டங்களில் இறப்பர் பெருந்தோட்டத்தை பிரதான தொழில்துறையாக இங்குள்ள தோட்ட மக்கள் கொண்டு செயல்படுகின்றனர்.

தற்கால பொருளாதார வளர்ச்சியில் தொழில்துறைகளிலும் மக்களிடையேயும் பிளாஸ்டிக், இறப்பர் போன்றவற்றின் கேள்விகள் அதிகரிக்க இவ்வாறான தோட்டத் தொழிலாளர்களாய் பணி புரியும் நம்மவரின் நிலை செத்து முடிவதாகவே போகின்றது.

இலங்கையில் பிரித்தானியரால் 19ஆம் நூற்றாண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இறப்பர் பெருந்தோட்ட பயிர்ச்செய்கை, தேயிலை பயிர்செய்கைக்கு இணையான வருவாயை ஈட்டித்தரும் பிரதான பயிர்ச்செய்கையாக முன்னேற்றம் கண்டுள்ளது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதி மற்றும் பெருந்தோட்ட செய்கையான இறப்பரானது, இரத்தினபுரி மாவட்டத்தில் மொத்த நிலப்பரப்பில் சுமார் 25 வீதத்திற்கு மேற்பட்ட பகுதியில் பயிர் செய்யப்பட்டுள்ளது.

இறப்பர் தோட்டங்களைப் பொறுத்தவரையில், இறப்பர் கன்றுகளை நட்டியது முதல் ஐந்து வருடங்கள் அதைப் பராமரித்து வளர்க்கப்படும். அதன் பின்னரான காலத்திலேயே அம்மரங்கள் பாவனைக்கு உட்படுத்தப்படும். இதன் பிறகு மரங்கள் நேர்த்தியான பாவனையின் அடிப்படையில் அவை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும். ஒரு நபருக்கு 350 தொடக்கம் 450 மரங்கள் வரை வழங்கப்படும். இம்மரங்கள் தொடர்ச்சியாகச் சீவப்படும் சந்தர்ப்பங்களில், அவை பாவனைக்கு வழங்கும் வீதம் குறைவடையும். இறப்பர் மரங்களை ஒவ்வொரு நாள் கடந்து வெட்டப்படும். ஒரு நபர் சராசரியாக ஒரு நாள் ஒன்றுக்கு 45 தொடக்கம் 50 லீற்றர் இறப்பர் பாலினை பெறுகின்றனர். அதேபோல், 3 தொடக்கம் 5 கிலோ கிராம் வரையாக உலர்ந்த இறப்பர் பெறப்படுகின்றது.

இறப்பர் தோட்டங்களை பொறுத்தவரையில், ஆரம்பக் காலங்களில் அரசாங்க நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமையினால், முறையான பராமரிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இறப்பர் தோட்டங்கள் தனியார் வசம் சென்றதனால், அவை முறையான பராமரிப்புக்கள் இன்றி அதிகரித்த உற பாவனைகள், இறப்பர் மரங்களை சீவுவதற்கான காலம் வருவதற்கு முதலே அவற்றை சீவுதல் என சீரற்ற பாவனை முறைகளை மேற்கொண்டு இலாப நோக்கினை மட்டும் கருத்திற்கொண்டு செயற்படுகின்ற தன்மையே காணப்படுகின்றது. அத்துடன், ஒரு தோட்டத்தில் அளவுக்கு மீறிய அளவில் இறப்பர் பாலினை பெறுதல் என முறையற்ற செயற்பாடுகள் தனியார் உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றதை காணக்கூடியதாக உள்ளது.

இறப்பர் பெருந்தோட்டத்தை பொறுத்தவரையில் மழைக்காலங்களில் அவை வெட்டப்படுவதில்லை. ஆனால் தற்காலத்தில் தனியார் வசம் இருக்கும் காரணத்தினால் மரங்களுக்கு பொலித்தீன் உறைகள் அடைக்கப்பட்டு மரங்கள் மழைக்காலங்களிலும் வெட்டப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. இவ்வாறு மழைக்காலங்களில் வெட்டப்படுவதினால் மரங்கள் அதன் தரத்தினை வெகு விரைவில் இழக்க கூடிய நிலைப்பாடு ஏற்படுகின்றது என்றும் இறப்பர் தோட்ட தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



இறப்பர் செய்கை பரவலாக பயிர்ச்செய்யப்படுகின்ற இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங்களினை பொறுத்தவரையில், இறப்பர் செய்கை வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலைப்பாட்டினை அண்மைக்காலங்களில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இப்பிரதேசங்களில் இப் பெருந்தோட்டம் தற்காலத்தில் அழிக்கப்பட்டு வருகின்ற செயற்பாடு கனிசமாக காணப்படுகின்றது. அவ்வாறு இறப்பர் மரங்கள் அழிக்கப்பட்டு 'செம்பணை' எனப்படுகின்ற சிங்கள மொழியில் 'கட்டுபொல்' என்ற ஒரு வகையான செடி பரவலாக நாட்டப்பப்பட்டு வருகின்றது. இந்தச் செடியானது பிரதேசத்தின் நீர் வளத்தைப் பாதிக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது. செம்பணை என்ற தென்னை மாதிரியான இச்செடியானது எண்ணெய் உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றது. இத்தாவரமானது சுற்றுச்சூழல் மாசடைவுக்குப் பிரதான காரணமாகவும் நீர் வளத்தினை உறிஞ்சி அப்பிரதேசங்களின் நீர் பற்றாக்குறைக்கும் அதிகரித்த வெப்பநிலையான காலநிலைக்கும் காரணமாக இருக்கின்றது.

அதேவேளை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்கள் ஒருநாள் சம்பளத்தினை முழுவதுமாக பெற்றுக்கொள்ள வேண்டுமானால், பல மீற்றர் தூரங்கள் அந்த இறப்பர் பாலினை சுமந்து கொண்டு செல்ல வேண்டும். 45 தொடக்கம் 50 லீற்றர் இறப்பர் பாலினையும் 4 தொடக்கம் 5 கிலோ வரையான உலர்ந்த இறப்பரினையும் எடுத்து தலையில் தாங்கி செல்ல வேண்டும். இவ்வாறான ஒரு பரிதாபமான நிலையை இம்மக்கள் கடந்து செல்கின்றனர். அதேநேரம், மழைக் காலங்களில் தொழிலாளர்கள் வேளைக்குச் சென்று இறப்பர் பாலினைப் பெறும்போது, அவற்றில் மழை நீர் படுவதனால் அவை உடனடியாக உறை நிலைக்கு சென்றுவிடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உறைந்த பால் நிர்வாகத்தால் பெற்றுக் கொள்ளப்படும். ஆனால், அன்றைய தினம் வேளைக்குச் சென்ற குறித்த தொழிலாளர்களுக்கு அன்றைய நாளுக்கான பெயர் வழங்கப்படாது. இவ்வாறானதொரு பரிதாபமான நிலையிலேயே இறப்பர் தோட்டத்தொழிலாளர்கள் தங்களுடைய நாளாந்த ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். இயன்றளவில் அருகி வரும் இறப்பர் தோட்டங்களினால் அப்பகுதி மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு, ஏழ்மையான நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.



# பேருந்தின் ஜன்னல் வழி பயணம்



ஹம்தா லதீப்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

எதிர்வரும் திங்கள், செவ்வாய் அரச விடுமுறை என்பதனாலும், எதிர்வரும் 20ஆம் திகதி வெளி மாவட்ட மாணவர்களுக்குப் பல்கலைக்கழக விடுமுறை. கொஞ்சம் நீளமான விடுமுறையை அனுபவிப்பது என்றால், விடுதிகளிலிருந்து வீடு நோக்கிச் சென்றால் தான் அதற்குப் பொருத்தமானதாக இருக்கும் என்ற எண்ணங்களோடு, ஊருக்குப் புறப்படும் அரச பேருந்துகளில் பொருத்தமான நேரத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றேன். இதற்கு வழமையாக உபயோகப்படுத்துகின்ற sltb.eseat.lk இணையத்தளத்தினுள் நுழைந்ததும் பெரிய அதிர்ச்சி. எதிர்வரும் நான்கு தினங்களுக்குரிய அனைத்து நேரப் பேருந்துகளிலும் முக்கால்வாசிக்கும் மேற்பட்ட ஆசனங்கள் முன்பதிவு செய்யப்பட்டிருந்தன.

நாங்கள் வீட்டு நோக்கி வர தீர்மானித்த மதியம் 2.30 மணிக்குரிய பேருந்தில் கடைசி இரு ஆசனங்களை முன் பதிவு செய்து ஊருக்கு வருவது என்று முடிவாயிற்று. அதன்படி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண அரச பேருந்து நிலையத்திற்குச் சென்றால் அடிக்கும் வெயிலிலும் மக்களும் பேருந்துகளும் அலை மோதியது. எனது இந்தப் பயணத்தில் மூன்று மாகாணங்களின் ஆறு மாவட்டங்களைக் கடக்க வேண்டும். சாதாரண விடயம் அல்ல யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்று வருவதென்றால் குறைந்தது 9 மணித்தியாலங்கள் முதல் 12 மணித்தியாலங்களாவது செல்லும். பேருந்து ஜன்னல் இருக்கையொன்றைப் பரிந்துரையின் பெயரில் பெற்றுக் கொண்டால் இன்னும் சிறப்பு. காரணம் வடக்கிலிருந்து கிழக்கு வரும் வழியில் நிலத்தோற்ற மாற்றங்களையும் சூழலில் மாற்றங்களையும் நேரடியாக அவதானிக்க முடியும்.

பொதுவாக யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரையும் உள்ள பிரதேசங்களைக் கடப்பதற்கு என் மனதில் ஒரு யுகமே தேவைப்படுகின்ற எண்ணம், வவுனியாவைத் தாண்டிவிட்டால் வீடு அருகில் வந்துவிட்டது என்று சமிஞ்சைகள் மூளையில் துளிர் விடுவது உண்டு. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை உள்ள நிலப்பகுதியில் அதிக தூரத்திற்குக் குடியேற்றங்கள், நகரங்கள் காணப்படுவது குறைவு. அத்தோடு தக்கின ஊசியிலை காடுகள் வெப்பமண்டல மழைகாட்டு காலநிலையும் கொண்டு மிக வறட்சியான இடமாகவும் இருப்பதினால் அதிகரித்த வெப்பம் அதற்குக் காரணமாகவும் கூட இருக்கலாம்.

> இரவுப் பயணம் என்பதனால் அதிக நிலப்பரப்பு இருளாகவே தென்பட்டது. இப்போது 'மீன் பாடும் தேன் நாடாம்' மட்டக்களப்பினுள் நுழைந்து விட்டோம். கடல் நீரேரிகளில் நீரின் மீதான விளக்குகளின் பிரதிபலிப்பு, அந்த நகரை ரம்மியமூட்டின. கல்லடி பாலம் கடந்து காத்தாங்குடியை அடைந்தால் வீதியில் நிற்கும் பேரிச்சை மரங்களும் அதன் மீது மின் விளக்குகளும் ஜன்னல் வழிப் பார்வைக்கு மிகவும் பொருத்தமானவை

ஒருவாறு வவுனியாவை அடைந்து விட்ட பெருமூச்சு இன்னும் கொஞ்சம் தான் என்று எண்ணம். இங்கு மக்களின் நடமாட்டம் மற்றும் தரை தோற்ற அம்சங்களிலும் வேறுபாடுகள் காணப்படும். வவுனியா பற்றிய சுவாரஸ்யங்களில் ஒன்று அனுராதபுரம், திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களின் எல்லை மட்டுமல்லாமல், பயணங்களில் முக்கிய புள்ளியாகவும் அமைகின்றது. பௌத்தர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் என இன ரீதியான பரம்பல்களையும் வழிபாட்டுத் தளங்களையும் காணும்போது, எமது பண்பாட்டினையும் அறிவதற்கு ஏதுவானதாகும். வவுனியாவைக் கடந்து மதவாச்சி, பூனாவ, ரம்பேவ, மிகுந்தலை வரை தாழ்நிலை உலர்வலய பகுதிகளுக்குள் உள்ளடங்குவதனால் கண் வெளிச்சத்தோடு மலைகளையும் நிலத் தோற்றங்களையும் காண முடிந்தது.

குளங்களின் இராசதானியான அனுராதபுர மாவட்டத்தின் முக்கியமான பகுதியான மிகுந்தலை அடையும் போதும் சாயங்காலம் 6 மணி இருக்கும். அங்கு மலைக் குன்றின் மீது தோன்றிய பௌத்த விகாரை பளிங்கு போன்று இல்லாமல் பளிங்காகவே மின்னும் போது, பேருந்தின் வேகத்தில் மரங்களின் குறுக்கீட்டையும் தடுக்க முடியாது. ஒரு நொடி முழுமையாகப் பார்த்தே இத்தனை நேர ஊடாட்டம்.

பொலன்னருவையை அடையும் முன்னர், ஈர வலைய காடுகளுக்குறித்தான ஹபரண காடுகளுக்குள் நுழைந்தது பேருந்து. காடுகளுக்கு நடுவே அகலமான வீதி. இப்போது என் எதிர்பார்ப்பு என்னவென்றால் பேருந்தின் மின்விளக்கு வெளிச்சத்தில் ஒரு யானையாவது பார்த்து விட முடியாதா என்பதுதான். ஏனென்றால், யானைகளுக்கான பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக இது விளங்குவதோடு, கடந்த மாதம் ஆசியாவிலேயே அதிகளவான யானைகள் ஒன்று கூடும் இடமாகவும் ஹபரண காணப்படுவதனால், சுற்றுலாவிற்குப் பிரசித்தி பெற்ற இடமாகவும் விளங்குகிறது.

> பேருந்து பயணத்தின் முடிவில் நான் இறங்கி விட்டேன். இருந்தாலும், எண்ணங்கள் இறங்கவில்லை. எமது நாடு சிறியதாகக் காணப்பட்டாலும் அதன் நிலத் தோற்றம், காலநிலை போன்றவை அதனை விடப் பெரிதாக இருப்பதனாலே சுற்றுலா செல்வதற்கான சிறந்த நாடுகள் வரிசையில் எமது நாடும் இடம்பெற்றிருக்கின்றது

பேருந்தின் ஓட்டத்தோடு, கிழக்கு மாகாணத்தின் ஆரம்பமான ரதீதென்னவினுள் நுழையும் போதும், ஈச்சமர காடுகளோடு தொடங்கியது பயணம், இரவுப் பயணம் என்பதனால் அதிக நிலப்பரப்பு இருளாகவே தென்பட்டது. இப்போது 'மீன் பாடும் தேன் நாடாம்' மட்டக்களப்பினுள் நுழைந்து விட்டோம். கடல் நீரேரிகளில் நீரின் மீதான விளக்குகளின் பிரதிபலிப்பு, அந்த நகரை ரம்மியமூட்டின. கல்லடி பாலம் கடந்து காத்தாங்குடியை அடைந்தால் வீதியில் நிற்கும் பேரிச்சை மரங்களும் அதன் மீது மின் விளக்குகளும் ஜன்னல் வழிப் பார்வைக்கு மிகவும் பொருத்தமானவை.

நகரும் பேருந்து மருதமுனையை அடைந்தது அங்கிருந்து காரைதீவு வரை கடை தொகுதிகளும் நகரமயமாக்கமும் அம்பாறை மாவட்டத்தின் ஆரம்ப பிராந்தியங்கள். இப்போது நேரம் சரியாக நள்ளிரவு 12 மணி இருக்கும். ஆனாலும், அதிகமான கடைகளில் வியாபாரங்கள் நடைபெற்றது ஆச்சரியம். நான் கண்டவற்றில் அநேகமான உணவனங்கள் மற்றும் அந்த நேரத்திலும் அதை நுகர்வோரும் தான். இதுதான் தூங்காத இரவுகளுக்குரிய பண்புகளாகவும் இருக்கலாம்.

பேருந்து பயணத்தின் முடிவில் நான் இறங்கி விட்டேன். இருந்தாலும், எண்ணங்கள் இறங்கவில்லை. எமது நாடு சிறியதாகக் காணப்பட்டாலும் அதன் நிலத் தோற்றம், காலநிலை போன்றவை அதனை விடப் பெரிதாக இருப்பதனாலே சுற்றுலா செல்வதற்கான சிறந்த நாடுகள் வரிசையில் எமது நாடும் இடம்பெற்றிருக்கின்றது.



# மாற்குவின் போர்க்கால ஓவியங்களின் காட்சி

சந்திரகுமார் ராதிகா,
கலை வரலாறு,
இறுதியாண்டு மாணவி,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் கலை வரலாறு கற்கை நெறியின் இறுதியாண்டு மாணவர்களால் 'அசாதாரணங்களின் காலம்' என்ற அ.மாற்குவின் போர்க்கால ஓவியங்களின் காட்சியானது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைக்கூடத்தில் செப்டம்பர் 09ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதி வரை பார்வையாளர்களுக்காகத் திறந்திருக்கும்.

ஓவியர் அப்புஹாமிமாற்கு குருநகரில் பிறந்தவர். அவர், 'விடுமுறைகால ஓவிய குழுவில்' இலவசமாக வகுப்புகளை நடத்தியுள்ளார் மற்றும் யாழ்ப்பாணத்தில் மாணவர்களிடத்தில் நவீன ஓவியக் கலையை அறிமுகம் செய்வதில் முக்கியப்பங்கு இவருக்கு உண்டு. அவரது ஓவியங்கள் சமகால சமூகத்தேவையோடு இணைந்தவை ஆகவும் உணர்ச்சிப் போக்குடன் அமைந்ததாகவும் காணப்படுகின்றன. போரினால் நிர்க்கதியாக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் நிலவரங்களை இப்படைப்புகள் வெளிப்படுத்துகின்றன. போரின் நேரடிச்சித் தரிப்பாக இடப்பெயர்வு, குண்டுவெடிப்பு, பாலியல் வன்முறை, வான் தாக்குதல்கள், இறப்பு, காணாமல் போதல் போன்றவற்றையும் பலவருட மோதல்களால் எஞ்சியிருக்கும் கண்ணுக்குத் தெரியாத வடுக்களையும் மாற்கு தனது கலையின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

போரின் பொதுமக்கள் அனுபவித்த துன்பங்களுக்கு ஒரு சக்தி வாய்ந்த சான்றாக விளங்கும் அதேநேரத்தில் அமைதி மற்றும் ஆற்றுப் படுத்தலுக்கான ஆழ்ந்த ஏக்கத்தையும் போரின் சிக்கலான உணர்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றது.

ஓவியங்கள் நவீன வாத கலையின் உருவங்களைப் பின்பற்றி ஓவியர் வரைந்துள்ளார். பப்லோபிக்காசோ ஜோஜ்கீற் போன்றோரின் ஓவியப் பாணிகளை ஒத்த பாணியில் உருவச் சிதைப்பாக உருவங்களை விகாரப்படுத்தி வெளிப்படுத்தி உள்ளார்.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்னர் அவர் மன்னாருக்கு சென்றபோது, பல முக்கிய படைப்புகள் காணாமல் போயின அல்லது சிதைந்து போயின. இன்று எஞ்சி இருப்பவற்றில் தெரிவு செய்யப்பட்ட படைப்புகளைக் கொண்டு இக்காட்சியானது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது .

மாற்குவின் போர்க்கால படைப்புகள் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாகவும் விளக்கப் படங்களாகவும் சஞ்சிகை நிறத் தாள்களின் மீது வரையப்பட்ட ஓவியங்களாகவும் எண்ணை வர்ண கட்டிகளாலும் வரையப்பட்ட ஓவியங்களாகவும் அமைகின்றன.

போரின் போது நிலவிய ஓவியம் வரைவதற்கான சாதனங்களின் பற்றாக்குறையை மீறுகையில் கிடைத்தவற்றைக் கொண்டு அவர் படைப்புக்களை மேற்கொண்டுள்ளார். இதனால் பெரும்பாலான படைப்புகள் அழிந்து விடும் அபாயத்தைக் கொண்டுள்ளன.

இக்காட்சியானது மூன்று விதமான அணுகு முறைவாயிலாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் அனுபவங்களின் மீட்டலாகவும் போர் பற்றித் தெரியாதவர்களுக்கு அதுபற்றிய அறிக்கையிடலாகவும் இது அமைந்தது.

போர் பற்றிய சான்றுகள் படிப்படியாக அழிந்துவரும் நிலையில் அல்லது வேனுமென்றே அழிக்கப்பட்டுவரும் நிலையில் எமது வரலாற்றை பதிவு செய்வதாகவும் அதைத் திரும்பிப்பார்ப்பதாகவும் இக்காட்சியானது அமைந்துள்ளது.

இதைவரும் 20 ஆம் திகதிவரை இலவசமாகயாரும் பார்வையிடலாம்.



# திரை விமர்சனம்

# ABOUT ELLY

சந்திரகுமார் யதுக்ஷினி,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

புகழ்பெற்ற *Asghar Farhadi* (அஸ்கர் ஃபர்ஹாதி) திரைப்பட இயக்குநர், எழுத்தாளர், தயாரிப்பாளர் என பன்முகங்கொண்டவர்.

*Dance in the dust* ( 2003) *Beautiful city* (2004) என்ற திரைப்படங்களின் ஊடாக இயக்குநராக அறிமுகமாகிய இவர் *The Past, About Elly, A Separation, A Hero, Salesman, Every Body Knowns, About Elly* ஆகிய திரைப்படங்களையும் இயக்கியிருக்கிறார். கருவை மிக எளிதாகக் கட்டமைத்துச் சிக்கலான திருப்பங்களோ, பரபரப்பான காட்சிகளோ இன்றி, தனது இயல்பான இயக்கத்தின் மூலம், மனிதத் தன்மையின் சிக்கல்களை வெளிப்படுத்தும் கதைகள் மீதான திரைப்படங்களுக்குச் சிறப்பாக அறியப்பட்டவர். பல சர்வதேச விருதுகளை வென்றுள்ள அஸ்கர் ஃபர்ஹாதியின் படங்கள், சமூகம், அரசியல், உறவுகள் போன்ற முக்கியமான தளங்களில் ஈரானிய சமூகத்தைப் பிரதிபலிக்கின்றன.





இதன்படி, ஆடம்பரம், வலிமை மிகுதியைக் காட்டுகின்ற நிகழ்வுகள், என்பவற்றைப் புறக்கணித்து பழைய நண்பர்கள் குழு சேர்ந்து ஆரம்பிக்கும் விடுமுறைச் சுற்றுப்பயணம் இறுதியாக எப்படி முடிவடைந்தது என்பதை ஒருவரிக் கதையாகக் கொண்டு 2009இல் வெளிவந்த ஈரானிய நாடகத் திரைப்படமான *About Elly* (எல்லி) அஸ்கர் ஃபர்ஹாதியால் யதார்த்தமான காட்சிகளோடு, இயல்பாகப் படமாக்கப்பட்டிருக்கின்றது.

கதையின் *Protagonist* (கதாநாயக) பாத்திரங்களாக செபிடே, எல்லி, அஹ்மத் ஆகியோரும் *Antagonist* (எதிரி) ஆக, சூழலும் சந்தர்ப்பமும் அமைந்து கதை நகர்கிறது. அதேசமயம் பதற்றம் மெதுவாக உருவாக்கப்பட்டு, ஒரு எளிய மர்மமாக மனித உறவுகள், சமூக எதிர்பார்ப்புகள் ஆகியவற்றின் நுணுக்கங்களோடு கதைசொல்லும் உத்தி கையாளப்பட்டுள்ளது.

கதையின் *Plot-1* என்பது *Protagonist* (கதாநாயக) பாத்திரங்களில் ஒருவரான எல்லி காணாமல் போவதும், *Plot-2* என்பது எல்லியைத் தேட ஆரம்பிப்பதும், *Plot-3* என்பது எல்லியின் இறந்த உடல் கிடைப்பதும் என அமைகிறது.

ஈரானிய புவியியல் சூழலைக் குறிப்பாக கடற்கரைச் சூழல், பரந்த வெளி, சில வீதிகள், வீடு, கடைகள் என்பவற்றை மையப்படுத்தியதாக நகர்ந்து செல்லும் கதைக்களமானது மிக எளிமையாக அமைக்கப்பட்டிருப்பதோடு, படம் முழுவதும் கதைக்களத்தோடு சேர்ந்து பயணிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

திரைப்படத்தில் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றுமே அப்பாத்திரங்களாகவே வாழ்ந்து இருக்கிறார்கள் என்று கூறுமளவிற்கு யதார்த்தமான ஒரு இயல்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக சுற்றுப்பயணத்திற்குப் பயணிப்பது, தங்கியிருக்கின்ற வீட்டில் வேலை செய்துகொண்டே உரையாடுவது, விளையாடுவது, என ஒவ்வொரு காட்சிகளிலும் கதாபாத்திரங்களின் இயல்பான நடிப்பைக் காணலாம்.

*About Elly* (எல்லி) படத்தில் ஒளிப்பதிவும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஈரானிய சினிமாவின் ஒளிப்பதிவாளர்களில் ஒருவரான *Hossain Jafarian* (ஹொசைன் ஜாஃபரியன்), அவருடைய பணியின் மூலம் ஆழ்ந்த உணர்ச்சிகளையும் சூழ்நிலைகளையும் நேர்த்தியாகக் காட்சிப்படுத்தியுள்ளார்.

திரைப்படத்தின் கதையானது இரண்டு பிரிவாக வெவ்வேறு காட்சிகள் மூலம் சொல்லப்படுகிறது. அமைதியான தொடக்கத்தில் ஆரம்பித்து, பின்னர் மர்மத்தைக் கையாளும் போது கதை உச்ச நிலைக்குச் செல்கிறது. இந்த மாறுபாடானது ஒளிப்பதிவிலும் பிரதிபலித்திருக்கிறது என்றே கூறவேண்டும். படத்தினுடைய தொடக்கத்தில் மென்மையான காட்சியமைப்பும், மறு கட்டத்தில் அதிக இருள் தன்மையுடன் கூடிய ஒளிப்பதிவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மற்றும், வியக்கத்தக்க ஒளியமைப்பின் விளைவுகள் தவிர்க்கப்பட்டு, இயற்கை ஒளி பெரிதும் பயன்படுத்தப்பட்டிருப்பது கதாபாத்திரங்களின் யதார்த்தமான உணர்வுகளை வெளிப்படுத்துவதில் முக்கிய பங்கையாற்றியுள்ளது. உதாரணமாக, கதையின் அடிப்படை கதைக்களமாக அமைந்திருக்கின்ற கடற்கரையானது கதாபாத்திரங்களின் தனிமை, உதவியற்ற உணர்வு, போன்றவற்றை பிரதிபலிப்பதாகவும், வெளிப்புற காட்சிகளின் போது காட்டப்படுகின்ற மேகமூட்டமான வானம் கதாபாத்திரங்களின் மனநிலை, வளர்ந்து வரும் கவலை என்பவற்றை உணர்த்தும் வகையிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மர்மம் அதிகமாகக் கூடிய பகுதிகளில், *suspense and aftermath shots* பயன்படுத்தியிருக்கிறார். எல்லி காணாமல் போகும் காட்சியில் உருவாக்கப்படுகின்ற பதற்றம்;, கதாபாத்திரங்களைப் போல் பார்வையாளர்கள் மத்தியிலும் சஸ்பன்சை (*suspense*) ஏற்படுத்துகிறது. இது பார்த்துக் கொண்டிருப்பவர்களுடைய கவனத்தை முழுமையாகக் கவர்கிறது.

எதிர்பாராத சம்பவங்கள், பாத்திரங்களுக்கிடையிலான உரையாடல்கள்;; நிகழ்கின்ற சந்தர்ப்பங்கள், சுற்றுப்பயணத்தின் போதான சம்பவங்கள் ஆகியவற்றில், கதாபாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் *Close up shot, Medium shot, long shot , Wide shot* போன்ற *Camera Distance* துணைநிற்கின்றன. குறிப்பாக, கதையின் *Protagonist* பாத்திரமான எல்லி, பட்டத்தைப் பறக்கவிட்டு விளையாடிக்கொண்டிருக்கும் காட்சியில் உருவாகும் உணர்வுகளாக இருக்கட்டும், *opening* காட்சியில் கதாபாத்திரங்கள் சிரிப்பது, பேசுவது, விளையாடுவது போன்ற காட்சிகளில் உருவாகும் உணர்வுகளாக இருக்கட்டும் பாத்திரங்களோடு பயணிப்பது போன்ற உணர்வைத் தருவதாக எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றோடு, இயற்கையான ஒலி பயன்படுத்தப்பட்டிருப்பதும் யதார்த்தமான மனநிலையை உருவாக்குவதோடு, கடற்கரை, வீடு என்பவற்றில் பயன்படுத்தப்பட்டிருக்கும் நீலம், சாம்பல், பச்சை நிறங்கள் போன்ற *Tone* சூழ்நிலையின் நிச்சயமற்ற தன்மையையும், மனச்சோர்வையும் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கின்றது. ஒளி, இடம், உணர்வு ஆகியவற்றை நுட்பமாகக் கையாளும் ஜாஃபரியனின் ஒளிப்பதிவுத் திறன் படத்தின் வெற்றிக்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை அளித்திருக்கிறது.

*Hayedeh Safiyari* (ஹயீதே சஃபியாரி) *Editing* (எடிட்டிங்) கதாபாத்திரங்களுக்கிடையில் சஸ்பென்ஸ் பொருந்தக்கூடிய உணர்ச்சி ஆழத்தை உருவாக்கியிருப்பதும், குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறாக, ஃபர்ஹாதியின் *About Elly* (எல்லி), பாத்திரங்களுக்கிடையே மறைக்கப்படும் பொய், அதனால்; உருவாகும் பிரச்சினைகள், உறவுகள், உணர்வுகள், போன்றவற்றை யதார்த்தமான தன்மையோடு வெளிப்படுத்தி *Close Ending* ஆக அமையப்பெற்றிருக்கிறது.



# தேர் திருவிழா...



வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி- வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர் திருவிழா, திங்கட்கிழமை (16) சிறப்பாக இடம்பெற்றது.

காலை 7 மணியிலிருந்து விசேட பூசைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, வசந்த மண்டப பூஜை இடம்பெற்றது. பின்னர், 9.30 மணியளவில் வல்லிபுரத்து ஆழ்வார் ஆஞ்சநேயர் முன்னேவர, விநாயகரும் அவரை தொடர்ந்து மகாலக்ஷ்மியும் வல்லிபுரத்து சக்கரத்து ஆழ்வார் பெருந்தேரில் வலம் வந்தார்.

கடந்த 02.09.2024 அன்று கொடியேற்றத்துடன், பெருந்திருவிழா ஆரம்பமாகி, 15ஆம் திகதி வரை நடைபெற்ற இத்தேர்த் திருவிழாவிற்க்கு நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்தும் பல்லாயிரம் கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதில் பலர் தூக்கு காவடி, பால்க்காவடி, அங்க பிரதிஷ்டை, பால்குடம் போன்ற பல்வேறு நேற்றிக்கடன்களையும் நிறைவேற்றினர்.

இதேவேளை, மக்களுக்கு உரிய சுகாதார மற்றும் அடிப்படை வசதிகளை பருத்தித்துறை பிரதேசசபை, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளும் வழங்கியிருந்ததுடன், மக்களிறக்கான பாதுகாப்பு மற்றும் ஒழுங்குகளை பருத்தித்துறை பொலிஸாரும் மேற்கொண்டிருந்தனர்.

செவ்வாய்க்கிழமை (17) பிற்பகல் 3.00 மணியளவில் சமுத்திர தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது.

- பு.தஜிந்தன்







# விசேட தொழுகை...

நபிகள் நாயகம் அவர்களின் பிறந்த தினமான திங்கட்கிழமை (16) மீலாத் தினத்தையொட்டி ஹட்டன் பள்ளிவாசலில் விசேட தொழுகை வழிபாடுகள் இடம்பெற்றன.

- ரஞ்சித் ராஜபக்ஷ









# துஆ பிரார்த்தனையும் அன்னதானமும்

நபிகள் நாயகம் அவர்கள் பிறந்த தினமான திங்கட்கிழமை (16) மீலாத் தினத்தையொட்டி, பள்ளிவாசல்கள், தைக்கா கண்களில் விசேட சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

காத்தான்குடி ஹைறாத் ஜும்மா பள்ளிவாசலில் அன்னதான வைபவமும் விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

அப்துல் ஜவாத் ஆலிம் வலியுழ்ழாஹ் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில், மௌலவி எம்.ஏ.அப்துல் மஜீத் மஜீத் றப்பானி விசேட பிரார்த்தனையை நிகழ்த்தினார்.

- ரீ.எல்.ஜவ்பர்கான்











# மீலாத் தின ஊர்வலம்...

சாய்ந்தமருது மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மீலாத் தின ஊர்வலம் சாய்ந்தமருது பிரதேசத்தின் அனைத்து வீதிகள் வழியாகவும் வலம் வந்து மீலாத் தினத்தை திங்கட்கிழமை (16) சிறப்பாகக் கொண்டாடியது.

இதன்போது, சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் முன்னால் அமைந்துள்ள அஸ்கோலியா அப்பாவின் சியாரத்தில் மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசலின் பேஸ் இமாம் எஸ்.எச்.எம்.இம்தியாஸ் மௌலவியால் துஆ பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.







ஆக்ரா

குளிக்காத கணவன்;

# விவாகரத்து கேட்ட மனைவி



உத்தரபிரதேசத்தில் திருமணமான வெறும் 44 நாட்களில் விவாகரத்து கேட்டு சென்ற பெண்ணின் புகாரை கேட்டு பொலிஸார் திகைத்துள்ளனர்.

ஆக்ராவைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது கணவனின் செயலால் அதிருப்தியடைந்து, பொலிஸில் வரதட்சணை சித்ரவதை புகார் அளித்ததுடன், விவாகரத்து கேட்டும் முறையிட்டுள்ளார். அப்போது, சில திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உண்மையில் விவாகரத்துக்கு காரணம் வரதட்சணை கொடுமையல்ல. அதை விடவும் பெரிய கொடுமையான விடயம் என தெரிய வந்துள்ளது.

தனது கணவன் வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே குளிப்பதாகவும், தினமும் குளித்து சுத்தமாக இருக்குமாறு கூறினால், அதனை அவர் ஏற்க மறுப்பதாகவும் அந்தப் பெண் குற்றம்சாட்டியுள்ளார். மேலும், வாரம் ஒருமுறை கங்கை நதியில் ஓடும் நீரை எடுத்து உடலில் தெளித்து விட்டு, தூய்மையடைந்து விட்டதாகவும், திருமணமான 40 நாட்களில் வெறும் 6 முறைதான் அவர் குளித்திருப்பதாகவும் அவர் வேதனை தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட கணவன் - மனைவியை குடும்பல நல ஆலோசனை மையத்தில் ஒரு வாரம் கவுன்சிலிங் பெற பொலிஸார் அனுப்பி வைத்தனர்



நியூசிலாந்துக்கெதிரான தொடரில்

இலங்கை குழாமில்

# ஒஷாத பெர்ணாண்டோ

நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கைக் குழாமில் ஒஷாத பெர்ணாண்டோ இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் இறுதி டெஸ்ட் தொடரான இலங்கைக் குழாமில் இடம்பெற்றிருந்த நிஷான் மதுஷ்க, நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கான குழாமில் இடம்பெறவில்லை. குழாம்: தனஞ்சய டி சில்வா (அணித்தலைவர்), திமுத் கருணாரத்ன, பதும் நிஸங்க, குசல் மெண்டிஸ், அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், கமிந்து மெண்டிஸ், சதீர சமரவிக்கிரம, ஒஷாத பெர்ணாண்டோ, அசித பெர்ணாண்டோ, விஷ்வ பெர்ணாண்டோ, லஹிரு குமார, பிரபாத் ஜெயசூரிய, ரமேஷ் மெண்டிஸ், ஜெஃப்ரி வன்டர்சே, மிலான் ரத்னாயக்க.

திருவனந்தபுரம்

தையல் போட்ட பெண் மருத்துவரை

## தாக்கிய நோயாளி

கேரளாவில் அரசு மருத்துவமனையில் காயத்துடன் வந்த நபருக்கு தையல் போட்ட பெண் மருத்துவரை, நோயாளி தாக்கியதால், அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஆழப்புழாவில் உள்ள வந்தனம் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பெண் மருத்துவர் அஞ்சலி பணியில் இருந்துள்ளார்.

இந்நேரத்தில் தலையில் காயத்துடன் ஷாஜூ என்ற நோயாளி வந்தார். இதற்கிடையே, சிகிச்சை அறையில் அவருக்கு முதலுதவி செய்ததுடன், தலையில் காயபட்ட இடத்தில் தையல் போட்டதால், வலி தாங்க முடியாத நோயாளி, மருத்துவரின் கையை பிடித்து முறிக்க முற்பட்டுள்ளார். இதன்போது, செய்வதறியாது திகைத்த மருத்துவர் அங்கிருந்து உடனடியாக வெளியேறியுள்ளார். தொடர்ந்து மருத்துவமனை ஊழியர்கள் ஓடி வரவே நோயாளி தப்பி ஓடியுள்ளார்.

இதுகுறித்து ஆழப்புழா பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் நோயாளியை தேடி வருகின்றனர்.






ராய்ப்பூர்

மாந்திரீகம் செய்ததாக சந்தேகம்:

## 5 பேர் படுகொலை

மாந்திரீகம் செய்ததாக சந்தேகத்தின் பேரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் அடித்து கொல்லப்பட்ட சம்பவம் சத்தீஸ்கரில் பழங்குடியினர் வசிக்கும் சுக்மா மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சில மாதங்களாக இந்த கிராமத்தில், கிட்டத்தட்ட ஒவ்வொரு வாரமும் ஒரு குழந்தை அல்லது ஒரு ஆண் இறந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் இறப்புக்கு, இரண்டு தம்பதிகள் உட்பட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் தான் காரணம் என அப்பகுதி மக்கள் சந்தேகப்பட்டுள்ளனர். இதையடுத்து, குற்றம்சாட்டப்பட்ட குடும்பத்தின் கதையை முடித்து விட எண்ணிய கிராமத்தினர், குறித்த குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரை கட்டையால் தாக்கி கொலை செய்தனர்.

இது குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்த நிலையில், சந்தேகத்தின் பேரில் 5 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறனர்.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## டொட்டென்ஹாமை வென்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை கப்ரியல் பெற்றிருந்தார்.



புளூ நேவி சவால் கிண்ணத் தொடர்:

## இறுதிப் போட்டியில் சாய்ந்தமருது பைன் ஸ்டார்

அஸ்ஹர் இப்றாஹிம்

கல்முனை லெஜன்ஸ் விளையாட்டு கழகம் நடாத்துகின்ற புளூ நேவி சவால் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு சாய்ந்தமருது பைன் ஸ்டார் விளையாட்டு கழகம் தெரிவாகியுள்ளது.

விலகல் முறையிலான இந்த இருபதுக்கு-20 தொடரில் முன்னணி விளையாட்டுக் கழகங்களான நிந்தவூர் லகான் விளையாட்டுக் கழகத்தை முதலாவது போட்டியில், 53 ஓட்டங்களாலும், காலிறுதிப் போட்டியில், சாய்ந்தமருது லெவிண் ஹீரோஸ் விளையாட்டு கழகத்தை 89 ஓட்டங்களாலும், அரையிறுதிப் போட்டியில் கல்முனை விக்ரோரியஸ் விளையாட்டுக் கழகத்தை 61 ஓட்டங்களாலும் வென்றே பைன் ஸ்டார் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

வொஷிங்டன்

# "டெய்லர் ஸ்விஃப்டை வெறுக்கிறேன்"

டொனால்ட் ட்ரம்ப்





அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், "பொப் இசை நட்சத்திரமான டெய்லர் ஸ்விஃப்ட்டை வெறுக்கிறேன்" என சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ் மற்றும் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் இடையேயான விவாதம் செவ்வாய்க்கிழமை(12) முடிவடைந்ததையடுத்து, பாடகி டெய்லர் ஸ்விஃப்ட் சமீபத்தில் கமலா ஹாரிஸை ஆதரித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து அதிருப்தியடைந்த ட்ரம்ப், சமூகவலைத்தளத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இருப்பினும், அரசியல் விவகாரங்களில் ஸ்விஃப்ட் தனது கருத்தை வெளிப்படுத்துவது இது முதன்முறை அல்ல. 2018 இடைக்காலத் தேர்தலில் கூட, "டென்னசியில் இருந்து குடியரசுக் கட்சி செனட் வேட்பாளர் மார்ஷா பிளாக்பர்னுக்கு வாக்களிக்க வேண்டாம்" என்று அவர் தனது ஆதரவாளர்களை வலியுறுத்தினார்.

ஸ்விஃப்ட் சமூக ஊடகங்களில் 100 மில்லியனுக்கும் அதிகமான பின் தொடர்பவர்களைக் கொண்டுள்ளார். அவர்களில் 10 மில்லியன் பேர் அவரது இன்ஸ்டாகிராம் இடுகைகளை தீவிரமாக பின் தொடர்கின்றனர். இதனால் டெய்லர் ஸ்விஃப்ட்டின் ரசிகர்கள் தேர்தலில் ட்ரம்பிற்கு எதிராக வாக்களிக்கலாம் என நம்பப்படுகிறது.

கிழக்கில் தட்டெறிதலில் புதிய சாதனையுடன்

## தேசியத்துக்குச் செல்லும் காத்தான்குடி அதிப் அஹமட்



அஸ்ஹர் இப்றாஹிம்

கிழக்கு மாகாண ரீதியிலான ஏற்கெனவே 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் ஏற்படுத்தப்பட்டிருந்த 35.52 மீற்றர் தூரம் எனும் சாதனையை காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவன் எம்.எப்.அதிப் அஹமட், 36.41 மீற்றர் தூரம் எறிந்து புதிய கிழக்கு மாகாண சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியிலேயே இச்சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், முதலிடத்தை வென்று அதிப் அஹமட் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மலே

## "தவறான புரிதல்கள் தீர்க்கப்பட்டு விட்டன"

மாலைத்தீவு வெளியுறவு அமைச்சர்

"மாலைத்தீவு - இந்தியாவுக்கிடையேயான தவறான புரிதல்கள் தற்போது தீர்க்கப்பட்டு விட்டன" என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் மூசா ஜமீர் கூறியுள்ளார். மாலைத்தீவில், 2023இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், முகமது முய்சு வெற்றி பெற்ற நிலையில், அந்நாட்டில் பாதுகாப்பு பணியில் இருந்த இந்திய இராணுவ வீரர்களை வெளியேறும்படி அவர் உத்தரவிட்டார். இதனால் இந்தியா - மாலைத்தீவு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனால் அதிருப்தியடைந்த இந்தியர்கள், மாலைத்தீவுக்கு சுற்றுலா செல்வதை தவிர்த்தனர். இந்நிலையில், அமைச்சர் மூசா ஜமீர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 17 செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.